காஞ்சி

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2004 கார்த்திகை 17 (2-12-73) | இதழ்: 21

★

உள்ளே......

எல்லாம் தருமத்துக்கு!
(தம்பிக்கு அண்ணுவின் மடல்)

★

மாணவஉடன்பிறப்புகளுக்கு உருக்கமான வேண்டுகோள்!
(முதல்வர் கலைஞர்)

★

மறு வாழ்வு
(குறுநாவல்)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)

★

"தெருப்புழுதி ஞாயிற்றை மறைப்பதுண்டா?"

— நெல்லைக்கூத்தன் —

'நெருக்கடியில் குழப்படியை ஏற்ப டுத்தி
நினைத்தபடி கண்டபடி திட்டு கின்றார்;
தெருப்புழுதி ஞாயிற்றை மறைப்ப துண்டோ?
தள்ளுபடி ஆனவர்கள் தப்படிக் கின்றார்!
விருப்புடனே விடாப்பிடியாய்த் தலைகொ டுத்த
வேங்கையவர் கலைஞர்தாம் தமிழ்ப டித்த
பொறுப்புடையார்; சொன்னபடி செய்வார்! நல்ல
பாவடிகள் கற்றபடிப் புடையார் காணீர்!

அப்படியும் இப்படியும் சொல்லி மக்கள்
அகம்படிந்த எண்ணத்தை மறக்கடிக்கச்
செப்படிவித் தைசெய்தபடி அலைகின் றாரே!
சிறந்தபடி ஆளுகின்றார் கலைஞர் என்றே
செப்படி,அவர் சிந்தையினில் படியு மாறே!
சிந்தடியும் குறளடியும் கற்ற வர்க்கே
ஒப்படியே யாருள்ளார்? உறுதிப் பாட்டால்
ஒப்பற்றார் கலைஞரெனச் செப்படி நீயே!

அறிவுமடி சுரந்தபடி ஊறு கின்ற
அருஞ்சுனையின் நீரடியவர்! ஏரடி வாழும்
சிறப்புடைய உழவர்தம் சிரிப்பைக் காணச்
சீரான திட்டமிட்ட படியி ருப்பார்!
செறிந்தபடி யிருக்கின்ற பாவ லர்க்குச்
சீர்தலைமை ஏற்றபடி இருக்கும் ஏந்தல்!
நிறைந்தபடி ஆளுகின்ற தமிழ ராட்சி
நின்றிருக்கும் ஆல்போலக் கட்டிக் காப்போம்!'

விலை: 0-25 காசு

'குட்டிக்கதைகள் ஒரு நூறு!'

வேண்டுகோள்

அன்புத் தோழர்களே! வணக்கம்.

ஓரளவு இடைவெளி விட்டு உங்களோடு தொடர்பு கொள்ள நேர்ந்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு நூறு குட்டிக் கதைகளை உங்கள் முன் படைக்கிறேன்.

தொடங்குவதற்குமுன் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுக் கூறிவிடுகிறேன். ஏன்?

எதையும் அரசியலாக்குவது இப்போதைய நடைமுறை!!

எல்லாவற்றையும் அரசியல் பெட்டிக்குள் அடைத்துவிடுவது தற்கால மனநிலை!!

எதற்கும் அரசியல் வண்ணம் பூசி மகிழ்வது இன்றையப் பொழுது போக்கு!!

ஆனால்,

அரசியலுக்கு அப்பாலும் சில உணர்வுகள் உண்டு! சில உண்மைகள் உண்டு!

அந்த உணர்வின் அடிப்படையில் சில உண்மைகளுக்கு உருவங் கொடுத்துள்ளேன்!!

எனவே,

'இது இவரைக் குறிக்கிறது அது அவரை மறைமுகமாகத் தாக்குவது' என்றெல்லாம் கதைக்குள் புகுந்து தேவையற்ற ஆய்வுகளை நடத்தவேண்டாம் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

சமுதாயத்தின் மீது நான் காட்டும் 'விசுவாமித்திரப்'பார்வையே ஒரு நூறு கதைகளும்!! நான் காணும் குறைகளைச் சுட்டிக்காட்டுவதே என் நோக்கம், குத்திக்காட்டுவதாகக் கொள்ளினும் தவறில்லை.

குட்டிக்கதைகளின் 'தரம்' எப்படி இருப்பினும், தனிப்பட்டவரையும் நினைத்து எழுதப்பட்டன அல்ல என்பதை மட்டும் நீங்கள் நம்பவேண்டும்!!

நம்பமறுப்பவர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை என்றாலும், என்வேண்டுதல் மட்டும் உண்மையானது 'பாவமன்னிப்புப் பத்தில்' நான் இவ்வாறு குறிப்பிடவில்லை என்பதை எண்ணிப் பாருங்கள். நிற்க!

ஏற்கனவே காஞ்சி மலரில் பத்துக் குட்டிக்கதைகளை எழுதி விட்டதால் இங்கு பதினொன்றிலிருந்து தொடங்குகிறேன்.

11. இவளன்றோ தெய்வம்

மாதர் சங்கக் கட்டிடம் அது.

அங்கு,

சங்கத் தலைவியாக யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்ற ஆராய்ச்சி நடந்து கொண்டிருந்தது.

ஒருத்திமட்டும் பேசாமல் இருந்தாள்.

அவள்,

அந்தச் சங்கத்தின் சிறப்புப் பட்டமான 'குடும்பத்தெய்வம்' என்னும் சிறப்புப் பட்டத்தைச் சென்ற ஆண்டு பெற்றவள்.

"ஏன்டி சீதா! நீமட்டும் பேசாம இருக்கே; நீ யாரையாவது சொல்லேன்"

ஒருத்தி கேட்டாள்.

"பேசாம இல்லேடி; யோசனை செய்துகிட்டு இருக்கேன்..."

"என்னடி யோசனை?"

"இல்லே...மாதர் சங்கத் தலைவியா, எங்க வீட்டுக்காரர் மாதிரி, எவளாவது இருந்தா போடலாமேன்னு யோசனை செய்கிறேன்..."

குடும்பத்தெய்வம் வாயை மூடவில்லை.

"சீதாதான் நம்ம சங்கத்தலைவி"

எல்லாப் பெண்களும் ஏகமான தாகத் தேர்ந்தெடுத்தனர். ஃ

12. இதிலாவது உண்மை....?

"எனக்குக் கண்ணும் தெரியாது; காது கேட்காது; எனக்கு என்ன வேலை கிடைக்கும்?"

பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்த ஒருவன், நிருபரைக் கேட்டான் இப்படி.

அந்த நிருபர் சொன்னார்:—

"எங்க பத்திரிகையில் ஒரு நிருபர் வேலை காலியாக உள்ளது; என்னோடு வந்தால் தவறாமல் வாங்கித் தருவேன்" ஃ

13. புரட்சித் தீர்ப்பு

எலிகளுக்குள் தகராறு; போராட்டம்!!

வெள்ளெலி சுண்டெலியைக் குற்றம் சாட்டியது.

வீட்டெலி பெரிச்சாளியைக் குற்றம் சாட்டியது.

"நாம் எல்லாம் இனத்தால் எலிகளே' என்ற உணர்வு எந்த எலிக்கும் இல்லை.

எல்லாம் ஒரு காட்டுப் பூனையிடம் முறையிட்டன.

முறையிட்டு...?

நீதி கேட்டன!!

பூனையும் தீர்ப்புக் கூறியது.

தீர்ப்பின் பயன்

பூனைக்குத் தினமும் உணவாக எலிகள் பயன்பட்டன.

சண்டையிலும் எலிகள் பூனைக்கு உணவு!!

சமாதானத்திலும் எலிகள் பூனைக்கு உணவு!!

புரிந்து கொள்ளாத எலிகள்

பூனைக்குப் பாராட்டு விழா நடத்தின.

14. இரகசியம்

"எண்பது வயதில் ஒருவர் ஒரு பிள்ளைக்குத் தந்தையானார்"

படத்தோடு வந்த இந்தச் செய்தி தமிழ் நாட்டையே ஒரு குலுக்கு குலுக்கி விட்டது.

எல்லா நிருபர்களும் எண்பது வயதுக் கிழவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"இந்த வயதில் எப்படி உங்களால் ஒரு பிள்ளைக்குத் தந்தையாக முடிந்தது?"

"என்மனைவிக்கும் வயது எழுபது; அதையும் தெரிந்து கொள்ளுங்கள்..."

கிழவர் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

"இந்த நிலையில் நீங்கள் பிள்ளைக்குத் தந்தையாவதென்றால் அது மந்திரமாக இருக்கவேண்டும்; இல்லை மாயமாக இருக்க வேண்டும்..."

"மந்திரமும் இல்லை; மாயமும் இல்லை;"

கிழவன் சொன்னதைக் கிழவியும் ஆமோதித்தாள்.

"பின் எப்படி...?"

எல்லா நிருபர்களும் கேட்டனர்.

"நான் தெலுங்கு டப்பிங் படம் பார்த்தேன்;

அவள் தமிழ்ப் படம் பார்த்தாள்.

பத்தாவது மாதம் பெற்றோர்களாகி விட்டோம் நாங்கள் படம் பார்த்தது அதுதான் முதல்முறை"

"இந்திப்படம் பார்த்திருந்தால்...?"

நல்லவேளை! நிருபர்கள் அதைக் கூறவில்லை. ஃ

புலவர் அரிமதி தென்னகன்

மாணவ உடன்பிறப்புகளுக்கு உருக்கமான வேண்டுகோள்!

1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போர் தமிழகத்தில் நடைபெற்றது. மாணவ நண்பர்களே உங்களுக்குச் சொல்வேன். அப்போது தமிழ்நாடு முழுவதும் ரத்தக்களறி. திருப்பூரில், செயங்கொண்டத்தில், திருச்சியில், நெல்லையில், தில்லையில், மதுரையில், மாயவரத்தில் இப்படி அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் தமிழ் அன்னை தன்னுடைய அங்கமெல்லாம் ரத்தத்தைப் பூசிக்கொண்டு தலைவிரி கோலமாக புலம்பியெழும் வாயோடு, புனல்போக்கும் விழிகளோடு நின்று கொண்டிருந்தாள். அவளுடைய மேனியெல்லாம் கீறல்கள். அவளுடைய இதயத்திலிருந்து குபுகுபுவென ரத்த வெள்ளம் பீறிட்டுப் பாய்ந்து கொண்டிருந்தது. அவள் பெற்றெடுத்த மாணவச் செல்வங்கள் தமிழ்நாட்டுத் தெருவோரங்களில் பிணங்களாகக் குவிந்தனர். அவள் பெற்றெடுத்த எட்டுத் தமிழ் மறவர்கள் 'தமிழ் வாழ்க; இந்தி ஒழிக' என்று கூறிக்கொண்டு, தங்களுடைய தேக்குமரத் தேகங்களுக்கு தீ வைத்துக் கொண்டு, தீக்குளித்துச் செத்தார்கள்.

இவ்வளவிற்கும் பிறகு அன்று முதலமைச்சராக இருந்த பக்தவச்சலம் ஒரு நீதி விசாரணைக்கு உடன் பட்டாரா? அன்று நாடாளுமன்றத்திலே உள்துறை அமைச்சராக இருந்த குல்சாரிலால் நந்தா இது பற்றி என்ன சொன்னார் தெரியுமா? நான் அப்போது பாளையங்கோட்டை சிறைச்சாலையில் தனிமைச்சிறையில் அடைபட்டு, அப்போது அவர் கூறியதைப் பத்திரிகையில் படித்துப் பார்க்கிறேன்.

"தமிழ்நாட்டில் இவ்வளவு பெரிய புரட்சி நடைபெற்றும், எதற்கும் அசையாத மலைப்பாறை போல் பக்தவத்சலம் வீற்றிருந்தார், அவரைப் பாராட்டுகிறேன்" என்று நந்தா கூறினார். பாறை போல் இருந்தவரைப் பாராட்ட ஒரு மந்திரி அன்று. இங்கு பாகென உருகிப் பரிதவிக்கிற நம்மைப் பாராட்ட ஆள் கிடையாது தமிழகத்தில், எதிர்க் கட்சிகளில், நீங்கள் இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவனுடைய பிணம் விழுந்தது. உதயகுமார் என்கிற மாணவனுடைய பிணம், அது தண்ணீரில் மூழ்கிய காரணத்தால் அடையாளம் தெரியவில்லை. அதற்கு ஒரு நீதி விசாரணை, ஆனால் நூற்றுக் கணக்கான பிணங்கள் தமிழ்நாட்டுத் தெருக்களில் விழுந்தன. அதற்கு நீதிவிசாரணை கிடையாது.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து மறைந்த ராசாங்கம், கம்பம் கூடலூரில் கைது செய்யப்பட்டு, சிறையில் போட்டு அடைத்து வைத்திருந்த போது, அவர் சிறுநீர் கழிக்கச் சென்ற போது அவர் தப்பியோடுகிறார் என்று குற்றஞ் சாட்டி அவரை துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல சதி செய்து, அவர் உடம்பெல்லாம் சவுக்கால் அடித்து, மேனியெல்லாம் காயங்களோடு சிறையில் அடைத்தார்கள். 1966 வரை சிறையில் இருந்தார் அவர். பிறகு ஜாமீனில் வழக்காடி வெளியே வந்தார். நல்லகாலமாக, அண்ணாவின் ஆட்சி வந்தது. அதிலே விடுதலை பெற்றார். அந்த அளவிற்கு கொடுமைகளைப் புரிந்தார்கள். நீதிவிசாரணை உண்டா? கிடையவே கிடையாது,

இன்றைக்கு எந்தச் சம்பவமென்றாலும் நீதிவிசாரணை நடத்தி, அந்த நீதி விசாரணையின் — நீதிபதியின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு, உடனடியாக அதிகாரிகள்மீது நடவடிக்கைகளும் எடுப்பதுதான் கழக அரசு. இவ்வளவு நல்ல காரியம் செய்கிற கருணாநிதியே நீ ராஜினாமா செய் என்று சிலர் கூறுகிறார்களென்றால் இதென்ன வேடிக்கை? இதை எல்லாம் செய்யாத பக்தவத்சலத்தைக் கொண்டுவந்து மீண்டும் பதவியில் உட்கார வைக்கவா? நீதிவிசாரணையா—முடியவே முடியாது என்று தலையாட்டிய காமராசரை மீண்டும் பதவியிலே அமர்த்தவா! நாங்கள் எல்லாம் இந்தப் பதவியே சதம் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களல்ல.

அன்று சட்டக் கல்லூரிக்கு முன்னால்—அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் மாணவர்களுக்கும், பஸ் தொழிலாளர்களுக்கும் மோதல் வந்த நேரத்தில் இருவரும் மோதிக்கொள்ளாமல் இருவருக்கும் இடையில் ஒரு பெரிய அணைக்கட்டு போல் நின்ற திரேகம்தான் இந்தக் கருணாநிதியின் சிறிய திரேகம். அதை மறந்து விடாதீர்கள்.

பஸ் தொழிலாளர்கள் வைத்திருந்த ஆயுதங்கள் மாணவர்கள் மீது படாமல், மாணவர்கள் வைத்திருந்த ஆயுதங்கள் தொழிலாளர்கள் மீது படாமல் இருவருக்குமிடையே அணைக்கட்டாக நின்று கொண்

டிருந்தவன்தான் என்னுடைய அருமை மாணவ உடன் பிறப்புக்களே, உங்களுக்காக 1938 ஆம் ஆண்டு முதல் உழைத்துப்பாடுப்பட்டு, உங்கள் போராட்டத்தின் காரணமாக பாளையங்கோட்டை சிறையிலே 62 நாட்கள் தனிமைச்சிறையில் கிடந்த கருணாநிதி. (பலத்த கை தட்டல்) நான் உங்களைக் கேட்கிறேன். என்னை விலகச் சொல்லிவிட்டு, வேறு யாரை எந்தக் கட்சியின் ஆட்சியை இங்கே கொண்டு வந்து அமர்த்த நீங்கள் விரும்புகிறீர்கள்? உங்களைச் சுட்டுச் சுட்டுக் கொன்றார்களே, அந்தப் பக்தவத்சலத்தின் ஆட்சியையா? அதற்கு நீதி விசாரணை கிடையாது என்று தன்னுடைய நெடிய நாக்கால் புகழ்ன்றாரே, அந்தப் பக்தவத்சலத்தின் ஆட்சியையா? முதுகுளத்தூரில் யாரைச் சுட்டு வீழ்த்தினால் என்ன, நீதி விசாரணை என்பதே எங்கள் ஆட்சியில் மரபல்ல, வாடிக்கையல்ல, என்று கூறினார்களே, அந்தக் கட்சியின் ஆட்சியையா? இவைகளையெல்லாம் யோசிக்க வேண்டாமா?

நீதி விசாரணை நாம் வைக்கிறோம். நீதிபதிகளும் அரசாங்கத்திற்கு அஞ்சாமல் எது நியாயமோ அதைச் சொல்கிறார்கள். இவ்வளவு நியாயம் நம்முடைய தமிழகத்தில் கிடைத்தும்கூட, இங்கேயிருக்கிற சிலர் வெளி மாநில நீதிபதிகள் வேண்டும். இங்கே கோர்ட்டுக்கு ஒரு வழக்கு என்று போனால், உடனே சுப்ரீம் கோட்டில் ஒரு தடை வாங்கிக் கொள்கிறார்கள்.

தமிழ்நாட்டு நீதிபதியை நம்ப முடியாது என்று சுப்ரீம் கோர்ட்டிற்குப் போகிறவர்களே, கிளவ் ஆஸ்டல் தீர்ப்பு வழங்கிய நீதிபதியை மாத்திரம் எப்படி நம்புகிறீர்கள்? அவர்களை நம்பாமல் சுப்ரீம் கோர்ட்டிற்குச் செல்லுங்களேன். பொதுமக்களாகிய நீங்கள் இதையெல்லாம் புரிந்து கொள்ளவேண்டும். மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் நல்லவைகளைச் செய்கிறோம். நியாயங்களைக் கேட்கிறோம். எங்கேயாவது இடையில் தவறு ஏற்பட்டால் அந்த தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், தயவு தாட்சண்யமில்லாமல் கண்டிக்கிறோம்.

இதைப் புரிந்து கொள்ளாமல் இன்றைக்கு சிலர் இந்த அரசு கவிழ்ந்துவிட வேண்டுமென்று சொல்வார்களேயானால், இங்கே ஆயிரக்கணக்கில் கூடியிருக்கிற உங்களை எல்லாம் கேட்டுக்கொள்வேன். இது ஏதோ எங்களுடைய அரசு என்று கருதிக்கொள்ளாமல், உங்களுடைய அரசு, உங்களால் உருவாக்கப் பட்ட அரசு, நீங்கள் அமர்ந்து செங்கோல் பிடித்து ஆளுகிற அரசு, உங்கள் அத்தனை பேருக்கும் சட்ட சபையில் இடமில்லாத காரணத்தால் நீங்கள் 234 பேரைத் தேர்ந்தெடுத்து அதிலே 178 பேரை ஆளும் கட்சியாக்கி, அதிலே 15 பேரை உங்களுக்குப் பதிலாக—எங்களை உட்கார வைத்திருக்கிறீர்களே அல்லாமல், வேறல்ல. இது உங்களின் அரசு, மாணவர்களின் அரசு, ஏழைகளின் அரசு, குடிசைவாசிகளின் அரசு.

குமுறிக் கிடந்தோரின் அரசு, தெருவோரத்து நடைபாதைவாசிகளின் அரசு, ரிக்ஷா இழுப்போரின் அரசு, டாக்சி ஓட்டுவோரின் அரசு, அரசு அலுவலர்களுடைய அரசு, அரசாங்க அலுவலர்களுடைய அரசு, தொழிலாளர்களின் அரசு, தயவு செய்து ஒருநாளைக்கு உட்கார்ந்து, இந்த அரசு செய்த சாதனைகளை யோசித்துப்பாருங்கள். இந்த அரசு இல்லாவிட்டால் தமிழ்ச் சமுதாயம் இந்த அளவு விழிப்படைந்து இருக்க முடியுமா? நாம் செய்திருக்கின்ற நன்மைகள் போதாது, இன்னும் அதிக நன்மைகள் செய்யத்தானே அதிக அதிகாரங்கள் கோருகிறோம். அதற்குப் பெயர் தானே மாநில சுயாட்சி என்று சொல்கிறோம்.

அந்த மாநில சுயாட்சிக்காக போராட வேண்டும் வாதாட வேண்டும் என்றுதானே அண்ணா அவர்கள் கடைசியாக நமக்கு எழுதிய உயிலில் குறிப்பிட்டுவிட்டுப் போயிருக்கிறார். குடும்பத்தில் எழுதப்படுகிற உயிலில் இன்னின்னாருக்கு இன்னின்ன சொத்து, கோயிலுக்கு, இவ்வளவு, பாரியாளுக்கு இவ்வளவு, பத்துமித்திரர்களுக்கு இவ்வளவு என்று உயில் எழுதுவார்கள். ஆனால் கட்சித் தலைவன் எழுதுகிற உயில் நமக்கு எழுதப் பட்ட உரிமைச்சாசனம்.

மாநில சுயாட்சிக்காக போராட, வாதாட, உயிரைத்தர வேண்டுமென்று ஒரு இறுதிக்கட்டம் வந்தால் அப்போதும் திடமாக நில். இதுதான் அண்ணா நமக்கு வகுத்துத்தந்த வழி. அந்த வழி நிற்போம். வெல்வோம். கழகத்தைக் காப்போம். கழக அரசைக் காப்போம். அந்த உறுதியை எடுத்துக் கொள்வோம்.

(25—11—73 அன்று சென்னை 34-ம் வட்டத்தில் ஆற்றிய உரை)

"என் அண்ணன்!"

கவிஞர் சிவ. நடராசன்

மண்ணிடைப் பிறந்த தலைவருள் எல்லாம்
மாமுடி போன்றவன் அண்ணன்!
கண்ணின் வட்டக் கருவிழி போலும்—அறிவுக்
கூர்மையில் தெளிந்தவன் அண்ணன்!

வாடிய பயிர்க்கு வான்மழை போலும்
வாட்டம் தவிர்த்தவன் அண்ணன்!
தேடிய புதையல் கண்ணெதிர் நின்று—கையில்
கிடைத்ததைப் போன்றவன் அண்ணன்!

எழுத்தால் பேச்சால் இன்தமிழ் மொழிக்கு
ஏற்றம் அளித்தவன் அண்ணன்!
விழுதாய்க் கழகம் ஊன்றி வளர்ந்திட— அன்பை
வித்தாய்க் கொண்டவன் அண்ணன்!

கலைக்கும் மொழிக்கும் தனியிடம் தந்து
கடமையைச் செய்தவன் அண்ணன்!
மலையைத் துளைத்து மாநிலம் தன்னில்—பசு
மரமாய் நின்றவன் அண்ணன்!

உயிருள் உயிராய் ஒளியின் கருவாய்
உலகில் திகழ்ந்தவன் அண்ணன்!
அயராப் பண்பில் அரசிய லரங்கில்—நல்
அறத்தை விளைத்தவன் அண்ணன்!

நகருள் காஞ்சி சிறந்ததைப் போல
நல்லோர் தலைவன் அண்ணன்
சிகரம் போலொரு புதல்வன் தமிழ்க்கு—புவிச்
சிறப்பின் மொத்தம் அண்ணன்!

தம்பி,

ஏங்கோ படித்ததாக நினைவு; நகைச்சுவைக்காக எழுதப்பட்டதுதான்; என்றாலும் நான் கூற நினைக்கும் பிரச்சினைக்குப் பொருத்தமாக அமைந்திருப்பதால் அதனைச் சொல்லுகிறேன்.

ஒரு சீமான்; பிள்ளை குட்டிகள் இல்லை; பெரிய சொத்து! இவ்வளவு சொத்தும் யாருக்குப் போய்ச் சேரப்போகிறதோ, யார் அனுபவிக்க கொடுத்து வைத்தவர்களாக இருக்கிறார்களோ என்று ஊரார் பேசிக்கொண்டனர்.

ஒருநாள் அந்தச் சீமான் பத்திரிகைநிருபரிடம் சொன்னார்

என் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன் என்று.

துள்ளிக் குதித்தோடினார் நிருபர், இதழகத்துக்கு; கொட்டை எழுத்தில் செய்தியை வெளியிட்டார்; இன்ன சீமான் தன் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதிவைத்து விட்டார் என்று.

சீமானின் படம், புன்னகை பூத்த முகத்துடன்!

பாராட்டுக் குறிப்பு அவருடைய இயல்பை மெச்சி.

மற்ற இதழ் நிருபர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பைத் தட்டிப் பறித்துக்கொண்டாரே இந்த நிருபர் என்று அவருக்குப் பாராட்டு!

இவ்வளவு பரபரப்பு மூண்டுவிட்டது. மற்ற நிருபர்கள் சீமானை மொய்க்கத் தொடங்கினார்கள், விவரம் கேட்டறிய. என்னென்ன தரும காரியத்துக்குச் சொத்தினை எழுதி வைத்திருக்கிறார்? சிவன் கோயிலுக்கு எவ்வளவு? மடத்துக்கு எவ்வளவு? பஜனைக் கூடத்துக்கு என்ன சொத்து? பள்ளிக்கூடத்துக்காக ஏதாகிலும் உண்டா? அனாதைப் பிள்ளைகளுக்காக?—என்று இப்படிக் கேள்விகள் அடுக்கடுக்காக!

சீமான், கேள்விக்கணைகளைத் தொடுத்தவர்களைப் பார்த்த பார்வையில், ஒரு திகைப்பே இருந்தது.

என்ன கேட்கிறீர்கள்? இதெல்லாம் என்ன கேள்வி? என்று கேட்டார் சீமான்.

"தொல்லை கொடுப்பதாகக் கருதக்கூடாது. ஊரே எதிர்பார்க்கிறது விவரம் அறிய. அதனால் தான் கேட்கிறோம்" என்றார் சீமான்.

என்ன விவரம்?—என்று கேட்டார் சீமான்.

"தாங்கள். தங்கள் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதிவைத்திருக்கிறீர்களே, அதற்கான விவரத்தைத்தான்" என்றார்கள் நிருபர்கள்.

ஒரு வெடிச் சிரிப்பு கிளம்பிற்று சீமானிடமிருந்து. "அட இழவே! நான் சொன்னதைத் தப்பர்த்தம் செய்துகொண்டீர்கள் என்றல்லவா தோன்றுகிறது. ஐயா! நான் என்சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதிவைத்துவிட்டேன் என்றேன். உடனே உங்களுக்குக் கோயில் குளம், சத்திரம் சாவடி, இவைகளின் மீது கவனம் போயிற்று; நான் அந்தத் தருமத்தைச் சொல்லவில்லை ஐயா! சொத்து முழுவதையும் என் பங்காளிகள் ஏதாகிலும் பிற்காலத்திலே பற்றிக்கொள்ளக் கிளம்புவார்களோ என்ற, பயத்தில், இப்போதே என் மனைவி பேருக்கு எழுதி வைத்துவிட்டேன். அதைத்தான் நான் சொன்னேன், சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதி வைத்து விட்டேன் என்று. என் மனைவி பெயர் தர்மாம்பாள்—செல்லமாக தருமு! தருமு! என்று அழைப்பேன்! அதனால் சொத்து அவ்வளவும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன் என்று சொன்னேன். என்றார், நிருபர்கள் திணறிப்போயினர்! விஷயம் இப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்க்காமல், சீமானை, வள்ளல் என்றும் தருமவான் என்றும் ஏகப்பட்ட தூக்கு தூக்கிவிட்டோமே

ஆசாமி நம்மைப் பைத்தியக்காரராக்கி விட்டாரே என்று எண்ணி வெட்கப்பட்டனர்.

தருமாம்பாளுக்கு என்று சொல்வதற்குப் பதிலாக தருமத்துக்கு என்று சொன்னதால் இத்தனை விபரீதமான அர்த்தம் எழும்பிவிட்டது.

இந்தக் கதைதான் தம்பி! நினைவிற்கு வருகிறது காங்கிரஸ் கட்சி இப்போது பேசிக்கொண்டு வரும் பேச்சைக் கேட்கும்போது.

மறை பொருள்
இரு பொருள்
குறை பொருள்

இந்த முறையிலே கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றி அவர்கள் பேசுவதால், முழுப் பொருளை, உண்மைப் பொருளை அறிந்து கொள்ளாதவர்கள், மயங்குகின்றனர்; வேறு விதமான பொருள் கொள்ளுகின்றனர்.

இதனைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முனைகிறது காங்கிரஸ் கட்சி.

இந்த விதமான 'இருபொருள்' தரும் பேச்சை ஒரு பொறுப்புள்ள கட்சி பேசுவதை ஜனநாயகத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற நாட்டினர் ஏற்கமாட்டார்கள். இங்கு?

தேள் கொட்டிற்று
தேனுக இனித்தது

என்று பேசிடக்கூட அவர்கள் துணிவு பெறுகிறார்கள். என்ன விபரீதமான பேச்சய்யா இது!—என்று கேட்டிடினே, புருவத்தை நெறித்தபடி கேட்கவும் முனைகின்றனர்,

தேள் கொட்டாதா?
தேன் இனிக்காதா?—என்று.

வேடிக்கைக்காகச் சொல்லுகிறேன் என்றோ, அவர்களிடம் பகை உணர்ச்சி கொண்டதால் அவ்விதம் பேசுகிறேன் என்றோ எண்ணிக் கொள்வர். அவ்விதம் நான் பேசுபவன் அல்ல.

தீவிரத் திட்டம்
அதிதீவிரத் திட்டம்
புரட்சித் திட்டம்
புதுமைத் திட்டம்

என்றெல்லாம் பாராட்டினர் பலர், சீமான் தன் சொத்து அவ்வளவையும் தருமத்துக்கு எழுதிவைத்து விட்டதாகச் சொன்ன உடன் பாராட்டியதுபோல.

எப்போது கிடைத்தது அந்தப் பாராட்டு?

காங்கிரஸ் எர்ணுகுளத்தில் கூடி, நாட்டிலுள்ள பாங்குகளை (Bank) இனி சர்க்கார் உடமையாக்கிக் கொள்ளும் என்ற கருத்துப்பட, ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அதனை தேர்தல் அறிக்கையிலே இணைத்தபோது.

பாங்குகளை (Bank) தேசிய உடமை ஆக்க வேண்டும்; இன்று இந்த அமைப்புகள் முதலாளிகளின் ஆதிக்கத்தை வளர்க்கும் கருவிகளாக உள்ளன; உண்மையான நாட்டு முன்னேற்றத்துக்கு, மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுவதில்லை; முதலாளிகள் மேலும் மேலும் தங்கள் தொழில்களைப் பெருக்கிக் கொள்வதற்கே பயன்பட்டு விடுகின்றன, என்ற கருத்து பல ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

துவக்கத்திலே இந்தக் கருத்தைத் துடுக்குத்தனம் என்றும், பொருளாதாரச் சீர்குலைவு உண்டாக்க வல்லது என்றும், தனிநபர் உரிமையைத் தகர்த்துவிடுவது என்றும் கூறித் தாக்கினர் காங்கிரஸ் அரசினர்.

விவரம் அறியாதார் பேச்சு என்றும் வீண் குழப்பம்! மனப் பிராந்தி என்றும் கூறினர்; கண்டித்தனர்.

ஆனல் இந்தக் கருத்து மக்களாலே வரவேற்கப்பட்டு, வலிவு பெற்றது.

இந்தக் கருத்தினைக் கூறி, மக்களைத் தம் பக்கம் முற்போக்குக் கட்சிகள் இழுத்துக்கொண்டு விடுமோ என்ற அச்சம் ஆளவந்தார்களுக்கு ஏற்பட்டது.

அதனுல்தான் ஆளவந்தவர்கள், மக்களை மயக்கிட—பாங்குகளை தேசிய உடமை ஆக்கத் திட்டமிட்டு விட்டிருப்பதாக அறிவித்தனர்.

எர்ணுகுளத்தில் இந்தப் பேச்சு திட்ட வடிவம் கொண்டது; ஆனல் அதற்கு முன்பே தமிழகத்தில் 'நீலை அறிய'ச் சுற்றுப் பயணம் நடத்திய முன்னல் நிதி அமைச்சர், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அழுத்தந் திருத்தமாகக் கூறினர். பாங்குகள் தேசிய உடைமைகளாக்கப்பட வேண்டும் என்று.

அவர் சொன்னதன் விளைவுதான் எர்ணுகுளத்தில் எடுக்கப்பட்ட முடிவு என்று கருத இடம் இருந்தது. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், பொருளாதாரத் துறையிலே புலி! நிதி அமைச்சராக ஒரு முறைக்கு இருமுறை வேலை பார்த்தவர்; வித்தகர் என்று பாராட்டப்பட்டவர்; அவர் கூறுகிறார் பாங்குகள் தேசிய உமையாக்கப்பட வேண்டும் என்று.

காங்கிரசின் நடுநாயகர் அவர்!

பொருளாதாரத் துறையிலே நிபுணர் அவர்!

அவரே கூறிவிட்ட பிறகு, அதுபற்றி ஐயப்பாடு கொள்ளப் போமோ! பாங்குகளைத் தேசிய உடமை ஆக்கினல், பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும் என்ற அச்சத்தைக் கிளப்பிடுவோர் இனி வாய் மூடிக் கொள்வர்? என்று காங்கிரஸ் பேச்சாளர்கள் விளக்கமளித்தனர்.

இதனைவிடத் தீவிரமான திட்டம் வேறு இருக்க முடியுமா?

இதைப்போன்ற புரட்சிகரமான திட்டத்தைக் காட்டிலும் வேறு என்ன திட்டம் காட்டமுடியும் எதிர்கட்சிகளால்!

என்றெல்லாம் எக்காளமிட்டனர்.

தம்பி! நம்மைப்போல விளக்கம்வேண்டும், இரு பொருள் கூடாது என்று கருதுபவர்கள்,

எர்ணுகுளத்துத் தீர்மானத்தில் பாங்க்குகளை தேசிய உடமை ஆக்கிவிடப் போகிறோம் என்று திட்டவட்டமாகக் கூறக்காணோமே என்று கேட்டபோது, சீறி விழுந்தனர் ஆளுங் கட்சிச் சிலர்கள். ஏடா! மூடா! தேசிய உடமை ஆக்குவோம் என்று இவ்வளவு வெளிப்படையாகச் சொன்னால்தானா-ஏன்!-கோடிட்டுக் காட்டினால் போதாதா?

Social Control
சமுதாயக் கட்டுப்பாடு

என்று கூறியிருக்கிறோமே. அதன் பொருள் என்ன என்று அறிந்துகொள்ளக்கூடவா முடியவில்லை. அத்தனை மந்தமதியா?—என்றெல்லாம் பேசிக் கேலி செய்தனர்.

Social Control சமுதாயக் கட்டுப்பாடு என்பதற்கும் Nationalisation சர்க்கார் உடைமையாக்குவது என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? நிரம்ப!!

அதனைச் சிலர் எடுத்துக்காட்டியபோதுகூட, மறுத்தனர் இந்த மகானுபாவர்கள்.

பாங்க்குகளை தேசிய உடைமை ஆக்கவேண்டும் என்று வலியுறுத்திக்கொண்டிருக்கும் கிருஷ்ணமேனன் Social Control சமுதாய கட்டுப்பாடு என்பதற்கு உண்மையான பொருள், நடைமுறைப் பொருள் Nationalisation தேசிய உடைமை ஆக்குவது என்பதுதான் என்று விளக்கம் கூறினர்.

அப்போதுகூட ஆளவந்தார்கள் இல்லை! இல்லை! நாங்கள் கூறும் சமுதாயக் கட்டுப்பாடுவேறு, தேசிய உடைமையை ஆக்குவது என்பதுவேறு என்று அறிவிக்கவில்லை.

சொத்து அவ்வளவும் தருமத்துக்குத் தான் என்று கூறிய சீமான்போல இருந்து விட்டனர்.

ஏழை எளியோர்களின் செவிகளுக்கு பாங்க்குகள் சர்க்கார் உடைமை ஆக்கப்படும் என்ற பேச்சு இசையாக அல்லவா இருந்திடும். இனிப்பு கொஞ்சமா! மன மயக்கம் ஏற்படுமல்லவா!! அந்த நேரமாகப்பார்த்து ஓட்டுகளைத் தட்டிப்பறித்துக் கொள்ளலாமல்லவா? அந்த நினைப்புடன், இந்தப் பேச்சை உலவவிட்டனர்.

உண்மையிலேயே இவர்களுக்கு, பாங்க்குகளை தேசிய உடைமை ஆக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், அதனை இருபொருள் கொண்ட பேச்சாக்காமல், திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பர்.

ஆனால் காங்கிரஸ் கட்சியினரின் நோக்கம் வேறு!

ஏழைக்கு இனிப்பு அளிப்பதாகவும் இருக்க வேண்டும், அதேபோது முதலாளிகளுக்குக் கோபமோ ஐயப்பாடோ ஏற்படாமலும் இருக்க வேண்டும்.

ஏழைகளின் ஓட்டுகளும் வேண்டும், முதலாளிகளின் நோட்டுகளும் வேண்டும்,

சொல்லும் செயலும் இதற்குத் தகுந்ததாக அமையவேண்டும்.

ஏழை எளியோர்களே! எப்படிப்பட்ட புரட்சித் திட்டம் கொண்டுவரத் தீர்மானித் திருக்கிறோம் பார்த்தீர்களா? பாங்க்குகளை இனி முதலாளிகளிடம்விட்டு வைக்கப் போவதில்லை, சர்க்காரிடம் அவை வந்து சேரும் என்று கூறவும்,

முதலாளிகளே! பயம் ஏன்? சந்தேகம் ஏன்? பாங்க்குகளைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளாது! எடுப்பதாக இருந்தால் Nationalisation நாட்டுடைமை ஆக்குவது என்றல்லவா கூறியிருப்போம்; இப்போது நாங்கள் சொல்வது என்ன? கவனித்தீர்களல்லவா? கருத்துப் புரியவில்லையா? Social Control சமுதாயக் கட்டுப்பாடு என்றுதான் கூறினோம்; வேறில்லை; ஆகவே வீண் குழப்பம் கொள்ளாதீர் என்று கூறிடவும்.

ஏழைகளே! உங்களுக்காகப் பாடுபடும் எமக்கு உமது ஓட்டுகளைத் தாருங்கள்!! என்று கேட்டிடவும்,

முதலாளிகளே! உங்கள் ஆதிக்கத்தை அனுமதித்து வருகிறோம்; அது நிலைத்திருக்க வேண்டுமாயின் ஆட்சியில் நாங்கள் இருந்திட வேண்டும்; முற்போக்காளர் வந்திடின் Nationalisation நாட்டுடைமை ஆக்கி விடுவர் உம்மிடமுள்ள பாங்க்குகளை; நாங்கள் ஆட்சியில் இருத்திட வழி செய்திடின், Nationalisation நாட்டுடைமை ஆக்குவது அல்ல, Social Control சமுதாயக் கட்டுப்பாடு மட்டுமே திட்டமாக இருக்கும்; ஆகவே எடும் நோட்டுகளை! கொடும் தாராளமாக!! என்று கேட்டிடவும், வழி செய்து கொள்ளவே இந்த முயற்சி.

நாணயக் குறைவான முயற்சி அல்லவா என்று கேட்கத் தோன்றும். ஆனால் தம்பி! நாணயத்தின் மதிப்பையே குறைத்திடத் துணிந்தவர்கள் இதற்கா கூச்சப்படப் போகிறார்கள்!

அதெல்லாம் இல்லை. உங்கள் அண்ணாத்துரை பழிபோடுகிறான், எங்கள் நோக்கம் இருபொருள் கொண்ட பேச்சுப்பேசி இருதரப்பினரின் ஆதரவையும் பெறுவது என்பதல்ல; சமுதாயக் கட்டுப்பாடு என்றாலே நாட்டுடைமை ஆக்குவது என்பதுதான் பொருள் என்று தம்பி! யாரெனும் நாவாணிபம் புரிந்திடுவோர் வாதாட முன்வந்திடின்—அதற்காகவே தம்மை ஒப்படைத்துவிட்டோர் உளர்—அவர்களை காங்கிரஸ் மூலவர்களிலே ஒருவரும், இரயில்வே அமைச்சருமான S. K. பட்டீல் பேசியிருப்பதனைப் படித்துப் பார்க்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்.

பட்டீல், இவர்களின் குட்டு உடைப்பட்டுப் போகும் விதமாகப் பேசி இருக்கிறார்

இவரும் எர்ணாகுளத்தில் இருந்தவர்தான்! பாங்குகள் பற்றிய திட்டத்தை எதிர்த்தவரும் அல்ல!

இவருடைய வார்த்தை கவனிக்கத் தக்கதல்ல என்று கூறிடவும் முடியாது.

இவருடைய 'தயவு' தேவை இல்லை என்று காங்கிரசும் கூறிவிட முடியாது. இவர் மூலமாகவே, பெரிய புள்ளிகளிடம் பணம் பெறப்படுகிறது தேர்தல் நிதிக்கு. பொருளாளர்!!

ஆகவே எஸ். கே. பட்டீல், பாங்கு சம்பந்த மாக ஏற்பட்ட தீர்மானத்தை விளக்கிக் காட்டி யிருப்பது, உண்மை நிலைமையை எடுத்துக் காட்டுவதாகும்.

பேசவேண்டிய இடத்தில்தான் பட்டீல் பேசி இருக்கிறார்.

மகாராஷ்டிர கவர்னர் செரியன் தலைமை வகித்திட, செல்வபுரியினர் நாலாயிரவருக்கும் அதிகமாகக் கொலுவிருக்க, பம்பாய் நகர மணி மண்டபத்தில் இந்தத் திங்கள் இருபத்தி இரண்டாம் நாள். 'சிறப்பு விருந்தினராக' அழைக்கப்பட்டிருந்த பட்டீல், திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்,

> பாங்க்குகள் தேசீய உடைமை ஆக்கப்பட மாட்டா என்று உறுதி அளிக்கிறேன் என்று.

கனரா பாங்கியின் வைர விழாக் கொண்டாட்டத்திலே அவர் சிந்திய முத்து இது!

எர்ணுகுளம் தீர்மானம்பற்றி, பலர் பலவித மாகப் பேசிக் கொள்கிறார்களே, தீவிரவாதிகள் பாங்க்குகளைக் காங்கிரஸ் அரசு நாட்டுடைமை ஆக்கி விடும் என்று பொருள் கூறுகிறார்களே பட்டீல் இது பற்றி என்ன கூறுகிறார் கேட்போம் என்ற நோக்குடனேயே வைர விழாச் சொற்பொழிவாற்ற அழைத் தனர்!

எர்ணுகுளம் தீர்மானம் பற்றிய உண்மையான பொருளைக் கேட்டறிந்து கொள்வோம் என்ற நோக்கத்துடன் செல்வ புரியினர் நாலாயிரவர் கூடினர்.

எதற்கு அழைத்தார்கள் என்பதையும் அவர்கள் மனதிலே எந்தவிதமான சந்தேகமும் அச்சமும் புகுந்திருக்கும் என்பதையும், அவர்களுடைய அச்சத்தைப் போக்காவிட்டால் தன் ஆட்சிக்கும் கட்சிக்கும் எத்தகைய இன்னலும் இழப்பும் ஏற்படும் என்பதையும் நன்ருகப் புரிந்து கொண்டே பட்டீல் பேசியிருக்கிறார்.

> Mr. Patil askd Bankers not to entertain the fear that because the Congress election manifesto mentioned social control over banks and life-insurance it had armed itself with blanket powers to nationalise banks overnight. There need be no such fear

காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் பாங்க்குகள், இன்ஷூரன்ஸ் அமைப்புகள் ஆகியவைமீது சமுதாயக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதனுல், திடுமென இவைகளை நாட்டுடைமை ஆக்கிவிடும் அதிகாரத்தை காங்கிரஸ் அரசு பெற்றுக்கொண்டுவிட்டிருக்கிறது என்று எண்ணி அச்சம்கொள்ள வேண்டாமென்று பட்டீல், பாங்க்குக்காரர்களைக் கேட்டுக்கொண்டார்! அவ்விதமான அச்சம் இருக்கத் தேவையில்லை என்று அவர் கூறினார்.

தம்பி! எப்படி இருக்கிறது பார்த்தனையா. இவர்கள் போக்கு! எர்ணுகுளம் தீர்மானத்தை தூக்கிக்கொண்டு சந்தைச் சதுக்கும் சென்று சிந்து பாடுகிறார்கள் காங்கிரஸ் பேச்சாளர்கள்.

> தீவிரமான திட்டம்
> புரட்சித் திட்டம்
> புதுமைத் திட்டம்
> பொதுவுடைமைத் திட்டம்

என்றெல்லாம்; ஆகவே எமக்கு 'ஓட்டு'—என்று இறைச்சலிடுகின்றர்.

பட்டீலோ, செல்வபுரியினரைக் கூட்டிவைத்து தேர்தல் அறிக்கையிலே ஏதோ நாலுவார்த்தை எழுதி விட்டதால் என்ன குடிமுழுகிவிடும்! ஏன் இந்தப் பயம்! யார் உங்கள் பாங்குகளை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்! ஒரு பேச்சுக்குச் சொன்னேம், Social Control சமுதாயக் கட்டுப்பாடு என்று! அதற்காகவா அச்சம்! இப்போது என்ன, பாங்க்குகளை எடுத்துக்கொள்ளும் அதிகாரத்தையா. அந்தத் தீர்மானம் கொடுத்து விட்டிருக்கிறது, பயம் வேண்டாம்—என்று கூறுகிருர்.

அதிகாரத்தில் உள்ளவர்களைக் கண்டு மயங்கிடுவோரும் மிரண்டிடுவோரும் அதிக அளவு இல்லாமல், ஆள்பவர்கள் நமது ஊழியர்கள், நம்மை ஆட்டிப் படைக்கும் தேவதைகள் அல்ல என்ற உணர்வு கொண்டோர் பெருமளவும் உள்ள எந்த நாட்டிலும், இப்படி 'இரட்டை நாக்கு'க் கொண்ட ஒரு கட்சியை ஆட்சியிலே வைத்திருக்கமாட்டார்கள். இங்குதான் இடம் இருந்திட முடியும்—அதுவும் அதிக நாட்களுக்கு அல்ல—இப்படி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்களுக்கு.

காங்கிரசின் தேர்தல் அறிக்கை நாணயமான தாக இருந்திடின், பட்டீல் இப்படியா பேசியிருப்பார்?

ஆமாம்! நண்பர்களே! பாங்க்குகளைத் தனியாரிடம் விட்டுவைப்பதாலே, நாட்டின் வளர்ச்சி, மக்களின் வாழ்வு குலைகிறது. பாங்க்குகள் முதலாளிகளின் ஆதிக்க வளர்ச்சிக்கே இயங்கி வருகின்றன. ஆகவே நாட்டு நலனைக் கருதி பாங்க்குகளை நாட்டுடைமை ஆக்கிடக் காங்கிரஸ் முடிவெடுத்திருக்கிறது—என்றல்லவா பேசியிருப்பார்?

அந்தவிதமான பேச்சை சந்து முனையில் சத்தம் எழுப்புவோருக்கு விட்டு விட்டார்!

முதலாளிகளின் மனம் குளிரும் பேச்சை பட்டீல் பேசுகிறார்.

பட்டீல்தானே? அவர் அப்படித்தான்!—என்று கூறுவரோ! கூறிடின், கேள் தம்பி! பட்டீல் பேசியது தவறு! பாங்க்குகளை நாட்டுடைமை ஆக்கத்தான் போகிறேம் என்று இந்திரா அம்மையார் அறிக்கை விடத் தயாரா என்று! பாராளுமன்றத்தில், பாங்க்குகளை நாட்டுடைமை ஆக்குவதற்காக சட்டம் கொண்டுவரச் சம்மதமா, கேளேன்!

பட்டீல், மேலும் உடைக்கிறார், குட்டுகளை.

அச்சம் வேண்டாம் என்று சொன்னல் மட்டும் போதாது; பாங்க்குகளை நாட்டுடைமை ஆக்கிடும்

நோக்கம் இல்லை என்றால் எதற்காகத் தேர்தல் அறிக்கையில் பாங்குகள்மீது சமுதாயக் கட்டுப்பாடு விதிக்கப்படும் என்று குறிப்பிடவேண்டும் என்று செல்வபுரியினர் கேட்பார்களே, என்று தோன்று கிறது பட்டீலுக்கு.

அந்தக் கேள்விக்கும் சமாதானம் சொல்லிவிட வேண்டும்—(இது அக்டோபர்–பிப்ரவரியில் பொதுத் தேர்தல்—) என்ற நினைவு உறுத்துகிறது.
ஆகவே அவர், வெளிப்படையாகவே பேசுகிறார்.

> **சமுதாயக் கட்டுப்பாடு என்ற சொற்றொடர் காங்கிரசின் பழைய தேர்தல் அறிக்கைகளிலேயே இருக்கிறது. அதையேதான் இந்த அறிக்கையில் திரும்பவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனாலேயே அதற்கு ஒரு புது அர்த்தம் வந்துவிடுமா? அதனுடைய தாத்பரியம் என்ன என்றால், பாங்குகள் இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் பிரமாண்டமான பொருளாதார அமைப்புகள். ஆகவே அவைகளிலே மிக மோசமான ஊழல் நிர்வாகமோ, பணத்தை மோசடி செய்யும் போக்கோ தலைதூக்குமானால், சர்க்கார் தலையிடும்!—என்பதுதான்.**

தம்பி! எவ்வளவு தேன் தடவுகிறார் பார்த்தாயா? எவ்வளவு அக்கரை கவனித்தாயா, செல்வபுரியினரின் நேசத்தை உறுதிப்படுத்திக்கொள்ள.

> ஒப்புக்கு ஒரு வார்த்தை என்பதோடு விடவில்லை பட்டீல்! இது எப்போதும் பேசுகிற பேச்சு! இதற்கு இப்போது என்ன புதிதாகம் பொருள் வந்துவிட்டது! உங்களை யார் என்ன செய்யப்போகிறார்கள்! மோசடி நடந்தால்தானே சர்க்கார் குறுக்கிடும் என்கிறார்.

மோசடி எங்கு நடந்தாலும், தம்பி! எப்போது நடந்தாலும் குறுக்கிடும் அதிகாரம் சர்க்காருக்கு உண்டு!

சர்க்கார் என்ற அமைப்பு இருப்பதே, எந்தத் துறையிலும் மோசடி நடந்திடாமல் தடுக்கவும், மோசடி நடந்துவிட்டால் தண்டிக்கவும்தான்.

இதை தேர்தல் அறிக்கையிலே சேர்த்து. இதனைப் புரட்சித் திட்டம் என்று விளம்பரப்படுத்துவானேன்?

தம்பி! பட்டீலின் பேச்சைத்தான் படித்துப் பாரேன்.

> The expression social control was to be found in the previous Congress manifestos, and merely because it was repeated it did not acquire a new meaning. It meant that banking and insurance were institutions of such financial magnitude that it would be only in the case of gross mismanagement and misuse of funds that the government might step in

இவ்வளவும் பேசியும் விளக்கம் தருகிறார், சரியாகத்தான் இருக்கிறது, ஆனால் பாங்குகளை நாட்டுடைமை ஆக்குவது என்ற திட்டத்தைக் கண்டிக்கக்

காணோமே, ஒரு சமயம் மனதிற்குள் அந்தத் திட்டத்தை ஆதரிக்கிறாரோ என்று எங்கே முதலாளிகள் எண்ணிக்கொள்ளுவார்களோ என்று கவலைப்பட்டு பட்டீல், பாங்குகளை நாட்டுடைமை ஆக்கும் திட்டமே, ஒரு கேலிக் கூத்தான திட்டம் என்று சாடியிருக்கிறார்.

a rsdiculous proposition

என்றே கூறியிருக்கிறார்.

> தம்பி! வேறோர் நாடு தாங்கிக்கொள்ளாது இப்படிப்பட்ட போக்கினை ஏழைகளை மயக்க, தீவிரமான திட்டம் ஏட்டில்! முதலாளிகளிடம் சென்றோ, முகத்தைத் துடைத்துவிடுவது!

மிகப் பெரியவர்கள் அங்கு உள்ளவர்கள் என்பதால் முகத்தைத் துடைத்துவிடுவது என்று மட்டுமே கூறுகிறேன்.

நமது பேச்சின் தரம் கெட்டுவிடக்கூடாதே என்பதற்காக, இவர்கள் மேற்கொள்ளும் போக்குக்கு ஏற்றவார்த்தைகளைச் சொல்லாமலிருக்கிறேன்.

திட்டம் என்று ஒன்றைக் காட்டுகிறார்கள், இது முதலாளிக் கோட்டையைத் தகர்த்திடும் வெடிகுண்டு என்று வீரம் பேசுகிறார்கள்; பிறகு அவர்களே, அது வெடிகுண்டு அல்ல, வெறும் புஸ்வாணம் என்றும் எடுத்துக் காட்டுகிறார்கள். ஏன்?

> எதைச் சொன்னாலும் கேட்டுத் தீர வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு விட்டார்கள் என்ற நினைப்பினாலா?

இதுவா மக்களாட்சியின் மாண்பு! இந்த மோசடியா காந்தியாரின் அறநெறி அரசியல்!

தம்பி! பாங்குக்காரர்களையும் செல்வபுரியினரையும் கூட்டிவைத்துப் பேசுகிறாரே பட்டீல், பயம்வேண்டாம், உங்கள் அமைப்புக்கோ ஆதிக்கத்துக்கோ ஆபத்து ஏற்படாது என்று, அவர்கள் எந்த அளவு ஆதிக்கம் இன்று செலுத்துகிறார்கள் தெரியுமா, பொருளாதாரத் துறையில், தொழில் துறையில், திடுக்கிட வைக்கத்தக்க அளவு. ஒரு கணக்குத் தருகிறேன், பார் தம்பி! பாடமும் அறிந்துகொள்.

தொழில் வளர முதல்வேண்டும்; 'முதல்' யாருடைய ஆதிக்கத்தில் இருக்கிறதோ அவர்கள் 'தொழில் உலகை'த் தம் கரத்தில் கொண்டுவர முடியும். இதற்கு விளக்கம் தேவையில்லை. இந்தப் பொருளாதாரப் பிடிக்குப் பயன்படும் கருவிகள், பாங்குகள்! ஆங்கு உள்ள பணம் எவ்வளவு? பாரேன், கணக்கினை.

1962-ம் ஆண்டு	கோடிகள்
பம்பாயில்	442·83
டில்லி	316·11
கல்கத்தா	289·26
சென்னை	63·09

பாங்கிகளில் சேர்க்கப்பட்டிருக்கும் 'டிபாசிட்டு' பணத்தின் அளவு.

பம்பாயில் 442-கோடி ரூபாய்; வளம்கொழித்திடும் விதமாகத் தொழில் அமைச்சர் வெங்கடராமனால் ஆக்கப்பட்டிருக்கிறதாமே தமிழகம், அங்கு பாங்குகளில் உள்ள டிபாசிட்டுத் தொகை 63-கோடி

442
63 **!**

இடத்தின் இயல்பு ஒருபுறம் இருக்கட்டும், பிடி எவரிடம் என்பதைக் கவனிப்போம்

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

★ குர்தாக்கள்
★ பெல் பாட்டம்கள்
★ லுங்கிகள்
★ சேலைகள்
★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள் . . .
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.
(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)
எழும்பூர் :: சென்னை-8.

தம்பி! எல்லா பாங்க்கிகளிலும் சேர்ந்துள்ள 'டிபாசிட்' தொகை, 1960-ம் ஆண்டுக் கணக்குப்படி

1550-கோடி ரூபாய்.

இந்தத்தொகையில் ஐந்தேஐந்து பாங்க்கிகளில் மட்டும்

625-கோடி ரூபாய்!

மிச்சத்தொகை நாட்டிலே உள்ள எல்லா பாங்க்கு களிலும்!

இந்த ஐந்து பாங்க்கிகள் எவை?

1. சென்ட்ரல் பாங்க்
2. பாங்க் ஆப் இந்தியா
3. யுனைடெட் கமர்ஷியல் பாங்க்
4. பரோடா பாங்க்
5. பஞ்சாப் நாஷனல் பாங்க்

பெயர்கள் இருக்கட்டும், நாட்டிலே திரட்டப்படும் டிபாசிட் தொகையில் கிட்டத்தட்ட பாதி—625-கோடி ரூபாயைக் கைவசம் வைத்துக்கொண்டு, அதன்மூலம் தொழில் உலகில் பிடியை அழுத்திக் கொண்டிருக்கும் இந்த ஐந்து பாங்க்கிகளின் அதிபர்கள் யார்?

சென்ட்டிரல் பாங்க், பாங்க் ஆப் இந்தியா
இவை இரண்டும் டாடா! வின் கரத்தில்!

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்
பரோடா பாங்க்

இவை இரண்டும் பிர்லாவின் ஆட்சியில்!

பஞ்சாப் நாஷனல் பாங்க்
டால்மியா—ஜெயின் குடையின் கீழ்!

இவ்விதமான பொருளாதாரத்துறை ஆதிக்கத்தைத் தகர்த்திடத்தான், பாங்க்குகளை நாட்டுடைமை ஆக்கவேண்டும் என்று முற்போக்காளர் வலியுறுத்துவது.

1962ம் ஆண்டு, நமது கழகத் தேர்தல் அறிக்கையிலேயே, நாம் இதனை ஆதரித்திருக்கிறோம்.

காங்கிரஸ் அரசும் கட்சியும் இந்த முதலாளிகளுக்குக் கட்டியம் கூறிக்கொண்டும் மக்களிடம் மயக்கமொழி பேசிக்கொண்டும் வருகிறது.

பாங்க்குகளை சமுதாயக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப் போகிறோம் என்ற பேச்சு, இப்போது யோசித்துப்பார் தம்பி! கதையிலே சீமான் சொல்கிறானே, எல்லாச் சொத்தும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன் என்று, அதுபோன்ற விந்தைப் பேச்சா, வேறா?

உனக்கும் எனக்கும் புரிந்திருக்கிறது. பயன்? நாட்டுக்கல்லவா புரியவேண்டும்!

அண்ணன்,

அண்ணாதுரை

30-10-66

தொடர் கதை :

மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

அப்போதுதான் அறச்செல்வன் பணிமனையிலிருந்து வந்தான்.

வந்திருப்பவர்தான் அதியமானாக இருக்க வேண்டுமென உய்த்துணர்ந்தான்.

"வணக்கம். வாருங்கள்," எனக் கூறியவன் உள்ளே சென்று முகங்கழுவி உடைமாற்றிக் கொண்டு வந்தான்.

அதியமான் தன்னருகே அறச்செல்வனை அமரச் செய்தார்.

"பணிமனையில் வேலை எப்படியிருக்கிறது? எனப் பேச்சைத் தொடங்கினார் அதியமான்.

"பணிமனை வேலைகள் ஒரே வகையானவை தானே! இயந்திரம்போல செய்ததையே செய்து தீர வேண்டியிருக்கிறது."

"உங்கள் அலுவலகத்தில் 'முகிலன்' இருக்கிறாரல்லவா?"

"ஆம். அவர்தான் இப்போது மேலாளர் எனக்குப் பணி அவரால்தான் கிடைத்தது. மிக நல்லவர்; கண்டிப்பானவர்; செயலாற்றல் மிக்கவர்."

சிற்றுண்டி உண்டனர்.

முறைப்படி மணப்பேச்சு பேசினர். மாப்பிள்ளையைப் பெண் வீட்டாருக்குப் பிடித்திருந்தது. சென்னை வந்து செல்வியை ஒருமுறை பார்த்து முடிவு கூறுமாறு அதியமான் வேண்டி, விடை பெற்றபின், புகழேந்தியின் இல்லம் சென்றனர்.

புகழேந்திக்கும் வெள்ளிவீதிக்கும் திருமணம் இனிது நிறைவேறியது.

திருமணம் விரைந்து ஏற்பாடு செய்யப்பெற்று, விரைவாக நடத்தப் பெற்றது.

ஓய்பிலழகரின் இறுதியாவலை நிறைவேற்றுவதற்கென்றே நிகழ்ந்தது.

46

நெற்றி வெயர்வை நிலத்தில் விழப்பாடுபட்ட தொழிலாளிக்கும்; நிமிர்ந்தோ குனிந்தோ வேலைசெய்யாத—செய்ய விரும்பாத—முதலாளிக்கும் ஒத்த நிலையில் உறக்கத்தையளிக்கும் இரவுத் தாய், தன் அன்பாட்சியை அமைதியாகச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

கதைபேசும் வானத்து ஒளிமீன்கள் ஒளிக்கண்களை விரித்து ஆர்வமாக உலகை நோக்கிக் கொண்டிருந்தன.

பைய அசைந்து பரந்து வரும் பைந்தமிழ்த் தென்றல் யாரையோ கண்டு அஞ்சி ஒளிய முற்படுவது போலத் தோன்றியது.

உணர்ச்சி, அறிவு, வாழ்வுணர்வு ஆகியவற்றை அறவே மறந்து துறவு மனத்தோடு உலகத் துயிர்கள் தூங்கிக் கொண்டிருந்தன!

ஆனால், புகழேந்தி வீட்டில் கலகலப்பு நிலவியது.

பள்ளியறையிலே புகழேந்தி படுக்கையில் அமர்ந்தபடி வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் உடலிலே பொலிவுடன் உடுத்திருந்த பட்டாடைகள் பளபளத்தன.

அவனுள்ளமோ படபடத்தது.

அவனறிவும் உணர்வும் போரிட்டன.

அவன் எண்ணக் கோட்டைகளை யெல்லாம் நிகழ்ச்சியலைகள் அலைக்கழித்துத் தனித்தனியாகச் சிதைத்து உருவழித்து விட்டன!

வானத்து விண்மீன்களுக்கு இல்லாத வாட்டம், வண்ண எழில் நிலவுக்கு இல்லாத வருத்தம், வீசுந் தண்ணறுந் தென்றலுக்கு இல்லாத தவிப்பு, சிரிக்கும் மலர்க்குலத்துக்கு இல்லாத கவலை, மக்களுக்கு மட்டும் ஏன் அமைந்தது?

மாந்தருக்குச் சிறப்பாக அமைந்த தகுதிகளுள் துன்பமும் ஒன்றுதானோ?

ஓ, புகழேந்தி, உன் எண்ணங்கள் எங்கே? உன் ஏக்கங்கள் எங்கே? உன் கனவுகளும் கற்பனைகளும் எங்கே? உன் காதற் பேரரசின் கன்னி இளவரசி எங்கே? தீட்டித் தீட்டிப் பெருமைப்பட்ட திட்டங்கள் எங்கே?...

எங்கேயோ போய் ஒளிந்து கொண்டனவோ? சீ,

ஆவல்களுக்கு நாணமே இருப்பதில்லை. அது மட்டுமா? மானம்கூட இல்லையே! தோல்விக்குக் கூசாதவையல்லவா இவை?

சாவின் விளிம்பில்கூட ஆசைகள் பிறந்து கொண்டேயிருக்கும்!

காதல் என்ற அழகிய கனவுக்கு அடிமையாகிச் செல்வி என்ற பண்போவியத்தோடு வாழ்நாள் முழுதும் ஒன்றிக் கொஞ்சிக் குறைவற்ற நிறைவான இன்பத்தில் திளைத்து வாழ நீ செய்த கற்பனைகள் எல்லாம் எங்கே?

சிறிது நேரமே தோன்றி வண்ணமும் வனப்பும் காட்டி வையக மாந்தரை மயக்கி உடனே திடுமென மறையும் வானவில் போல உன் காதலும் இளமையுணர்ச்சியைக் கவர்ந்து மயக்கிப்பின் மாயமாக மறைந்து விட்டதோ?

செல்வி!

அடடா!

நினைத்தாலும் இனிக்கின்ற அந்த நித்திலச் சிரிப்புக்காரி, நெஞ்சினிக்க, நினைவினிக்க, வராது வந்த வையத்துப் பெருவியப்பு உன் காதலியா? உன் மனைவியா?

இல்லை. இல்லை. இல்லை.

அவள் இலக்கியக் கனவாகி விட்டாள்.

வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட் ...	ரூ. 5	ரூ. 355
	ரூ. 10	ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு ...	ரூ. 5	ரூ. 337.50
	ரூ. 10	ரூ. 675.00

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

நீ நினைத்துப்பாராத ஒருத்தி—வெள்ளிவீதி—உன் வாழ்க்கைத் துணைவியாக வாய்த்து விட்டாள்?

வெள்ளிவீதிக்கு என்ன குறை?

அழகி; நல்லிளமையுடையவள்; பண்பும் பாங்கும் செறிந்தவள்.

இந்தப் பாழும் உள்ளம் ஏனோ முரண்டு செய்கிறதே?

ஏன் ஏதோ ஒரு வெறுமையுணர்வு அவனை அணு அணுவாக விழுங்குகிறது?

புகழேந்தி நெட்டுயிர்த்தான்.

தலையிடாத சிறைவாழ்வு மக்களுக்கு எப்படி அமைகிறது? ஏன் அதைமீறி விடுதலை வாய்க்கவில்லை?

எதற்காக மற்றவர் தம் எண்ணம், பேச்சு, செயல்களுக்கு ஒருவர் கட்டுப்படவேண்டும்? இந்த அமைப்பை ஏன் அமைத்தார்கள்?

நாட்டுக்கும் மக்களுக்கும் இனத்துக்கும் உரிமை வேண்டும் என்கிறார்களே; தனி மாந்தனுக்கும் சமுதாயக் கட்டுப்பாடுகளிலிருந்து உரிமை வேண்டும் என்யாரும் போரிடவில்லையே; ஏன்? தனி மாந்தனை அடிமையாக்கும் தளைகள் மிகப்பல இருக்கின்றனவே! அவற்றினின்றும் மாந்தன் எப்போது விடுதலை பெறுவான்?

அறையினுள் யாரோ வருவதை உணர்ச்சி உணர்ந்தது.

திரும்பிப் பார்த்தான்.

வெள்ளிவீதி!

பொதினி மலையிலேயே கண்முன் ஆடி நின்ற பூந்தோகை மாமயில் போலப், பொற்றேர் போல; அவன் முன்னே பெண்ணிருத் தாங்கிய பெரிய விளக்குறிபோல நின்றாள்!

அறைக்கு வெளியே கிள்ளை மொழிகளும் கிளுகிளுப்புச் சிரிப்பொலியும் தேய்ந்தன.

பனி தோற்கும் குளிர்ச்சி, நித்திலத்தை வெல்லுங் கவர்ச்சி, கலைகளைப் புறங்காணும் கற்பனைக்கவின் எல்லாம் கனிந்து எழில் பழுத்த ஓவியமாய் இளமைப் பாவியமாய் நின்றாள் வெள்ளிவீதி.

பொன்னவிர் மேனியிலே புதுமையும் பொலிவும் போட்டியிட்டுப் பொங்கித் துளும்பியது.

அவள் அசைவெல்லாம் அழகு! அழகெல்லாம் இன்பம்! பேசும் ஒலியெல்லாம் இசை! இசையெல்லாம் இனிமை!

பருவத்தலைவாயிலிலே பூத்துக் குலுங்கும் இளமைப் பூங்கொடியாய் நாணஞ் சுமந்த மென்மையாய் வெள்ளிவீதி நின்றாள்!

இரு நடுவர்கள் வழக்காட நிற்கும் ஒரு அறமன்றம் போல அந்தக் கட்டிலின் முன்னே அவள் ஒருபுறம்! அவன் ஒருபுறம் இருந்தனர்.

(வளரும்)

குறுநாவல்:

மறு வாழ்வு!

இளங்கீரன்

கெறுக்குத் தெறித்தாற்போல் 'வெடுக் வெடுக்' கென்று பேசும் அவளைக் குறுஞ்சிரிப்போடு கூர்ந்து பார்த்தார், முத்து.

வாழ்வின் சுவைப் பகுதியை அவள் இன்னும் கடந்து விடவில்லை, வாலிப முறுக்கு அவள் மேனியெங்கும் மேவிக் கொண்டிருந்தது. அவளுக்கு வயது இருபத்தைந்து இருக்கும். சீவி விடப்படாத சுருள் சுருளான கூந்தலை அள்ளிச் செருகி இருந்தாள். காதிலும் கழுத்திலும் நகையெதுவும் இல்லாவிட்டாலும் அழகு குறைந்து விடவில்லை. சதைப்பற்றான உருண்டை முகம், மாநிறத்து மேனியை மேக வண்ண நூல் சேலை மூடி இருந்தது. வெட்டுக் காயத்தால் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிய இரத்தக் கறையோடு சிறிதே அழுக்கேறி இருந்தாலும் அந்தச் சேலை அவள் நிறத்தைப் பளிச்சென எடுத்துக் காட்டியது. பொத்தலும் உள்கச்சையும் இல்லாத சிறிய இரவிக்கை அவளது அங்கங்களை இறுக்கி நெருக்கி மறைத்துக் கொண்டிருந்தது. மொத்தத்தில் வெட்டுக்காயம் தந்த சிறிய நலிவைத் தவிர அவள் நன்றாகவே இருந்தாள்.

மணம் நிறைந்த மல்லிகைப் பூவாக இல்லாவிட்டாலும் கவர்ச்சி நிறைந்த காட்டுப் பூவாக அவள் இருந்தாள்.

குத்திக் குடைந்தெடுக்கும் எண்ணங்களை எல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு "உன் பெயரென்ன?" என்று அவர் மெதுவாக அவளைக் கேட்டார்.

"எம் பெயர் செம்பகம்!" கேள்வி கேட்டு முடிக்கு முன் அவள் பதிலைச் சொல்லிவிட்டாள்.

"ஓ! செண்பகமா? நல்ல பெயராயிற்றே!"

"ஆமா சாமி!" — அவள் முகத்தில் நாணம் நிழலாடியது.

"உனக்கு எந்த ஊர்?"

"பக்கத்து ஊர்தான்—காசிமேசர்புரம்."

"உனக்கு அம்மா, அப்பா, வேறு துணையாரும் இல்லையா?" — இதுவரை யாரிடமும் கேட்காத கேள்வியை அவர், அவளிடம் கேட்டார்.

"அப்பா இல்லே; அம்மா மட்டும் இருக்குது. எனக்குக் கல்யாணம் ஆயிடிச்சி. ஆனா அவரு — வேறொருத்தியைச் சேர்த்துக்கிட்டு எங்கேயோ போயிட்டாரு." — எவ்வித சஞ்சலமும் இல்லாமல் அவள் அமைதியாகப் பதில் சொன்னாள்.

"அம்மா உன்னைத் தேடமாட்டாளா?"

"அவ என்னோடே இல்லே. நான் தனியாத்தான் இருக்கிறேன்."

அவளது சரித்திரத்தையே ஒருவாறு கேட்டுத் தெரிந்துகொண்ட அவர் ஏதோ ஒரு நினைவிலிருந்து விடுபட்டவராய் "உனக்குப் பசிக்குமே! இரு; இதோ வருகிறேன்."—என்று உள்ளே சென்று ஐந்தாறு வாழைப் பழங்களையும் மாம்பழங்களையும் அவித்த குச்சிக்கிழங்கையும் ஒரு கிண்ணத்தில் தேனையும் எடுத்து வந்தார்.

"இதுதான் எனது இரவுச் சாப்பாடு. நீயும் இதையே சாப்பிட்டுக் கொள். வேறு எதுவும் இங்கு கிடைக்காது." என்று அவைகளை அவளிடம் நீட்டினார். இரு கைகளையும் விரித்து அவைகளை வாங்கி மடியில் போட்டுக்கொண்ட அவள், "சாமி! இது தானா ஒங்க சாப்பாடு? ஒங்களுக்குச் சோறு பொங்கித் தர இங்க யாரும் இல்லையா?" என்று கேட்டுக் குறும்பாகச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு அவரைச் சித்திரவதை செய்திருக்க வேண்டும். அதை மறைத்துக்கொண்டு, "ஆமாம். சாப்பிடு" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றார். மணையில் உட்கார்ந்து வாழைப்பழத்தைத் தோலுரித்துத் தேன் ஊற்றிப் பிசைந்தார். அதை எடுத்து இரண்டு உருண்டை சாப்பிட்டார். அதற்கு மேல் சாப்பிட முடியவில்லை. நிறுத்திவிட்டுக் கிழங்கை எடுத்துச் சாப்பிட்டார். அதுவும் எடுபடவில்லை. பிசைந்த பழத்தையும் தோல் உரிக்காத கிழங்கையும் எடுத்துக்கொண்டு செண்பகத்திடம் சென்றார். "இதையும் நீயே சாப்பிடு" என்று அவளிடம் கொடுத்துவிட்டு வெளியில் சென்று வாய் கொப்பளித்துக் கையலம்பி வந்தார்.

"நீங்க சாப்பிடலியா, சாமி?" பரிவோடு செண்பகம் கேட்டாள்.

"ஏனோ இன்று எனக்குப் பசியே இல்லை. நீ களைத்திருப்பாய். எல்லாவற்றையும் சாப்பிடு"—சொல்லிவிட்டு அவர் அவளைப் பார்த்தார். அவரது சிவந்த முகத்தில் கருந்தாடி கவர்ச்சிகரமாக இருந்தது. அது அவளைக் கவர்ந்திருக்க வேண்டும். அவள், அவரைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தாள்.

"சாமி! என்னால ஒங்களுக்கு எவ்வளவு சங்கடம்! நானும் மூணு வருசமா இந்தக் காட்டிலே வெறகு வெட்டறேன். ஒரு நாள்கூட இப்படி வெட்டுப் பட்டதே இல்லே. ரெத்தத்தையும் பார்த்ததே இல்லே. எங்கெட்ட காலம்"—அவரது திடகாத்திரமான, உடம்பை வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டே அவள் புலம்பினாள்.

"சே! அப்படியெல்லாம் சொல்லாதே! நான் எப்போதுமே இரவில் அதிகம் சாப்பிடுவதில்லை."—அவளை. அவர் தேற்றினார்.

"நீங்க சோறே சாப்பிடுறதில்லையா சாமி?"

"மத்தியானம் மட்டும் சோறு சாப்பிடுவேன். மற்ற இரு வேளைகளிலும் இப்படித்தான் பழமும் கிழங்கும்...ம்...நேரமாகிறது, நீ படுத்துக் கொள்."

அவளோடு பேசிக்கொண்டும் அவளது சிரிப்பைப் பார்த்துக்கொண்டும் இருக்கவேண்டும் என்ற ஆவல் அதிகம் இருந்தாலும் அத்துடன் அவர் பேச்சை நிறுத்திக்கொண்டார். பிறகு குகைக்கு வெளியில் வந்து, பூச்சி பொட்டு; காட்டு மிருகங்கள் எதுவும் உள்ளே வராதிருக்க வெளிப்பகுதியில் சுள்ளிகளை அடுக்கி வழக்கம்போல் தீ மூட்டினர்.

வயிறு நிறையாத அரைகுறை சாப்பாட்டைச் சாப்பிட்ட செண்பகம் குகை ஓரத்து மணற் பரப்பில் தனது சேலை முந்தாணையை விரித்துப் படுத்தாள். கண்கள் இரண்டும் அவரையே வட்டமிட்டன.

அவரும் அவளையே பார்த்துக்கொண்டு உள்ளே சென்று விரித்துவிட்டிருந்த மான்தோல் இருக்கையில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தார்.

5

தினம் தினம் சீரான தியானத்தில் ஈடுபடும் மனம் இன்று ஏனோ கனம் நிறைந்து இருந்தது. அது ஒரு முகப்படவே இல்லை. விளக்கைக் கண்ட விட்டில் பூச்சியைப்போல் துடித்துக்கொண்டிருந்தது.

இலையோடு இலையசைந்து ஏற்படும் சிறு சந்தடி கூட இல்லாமல் காடே அமைதி சூழ்ந்து கிடக்கும் இரவு நேரம்! மனம் தியானத்தில் ஈடுபட எவ்வளவு இனிமையான சூழ்நிலை! ஆனால் முத்துவோ நிலை குலைந்து தவித்தார். கடந்த முப்பதாண்டு காலமாக இல்லாத புதிய தவிப்பு!

பால் சுவையோ பழச்சுவையோ எனப் பார்த்தாலே சுண்டி இழுக்கும் பளபளப்பான மேனியுடனும் பகட்டான ஆடை அலங்காரத்துடனும் தன்னிடம் ஆசிபெறவரும் விதவிதமான பெண்களிடம் தெரியாத அழகு அன்றாடம் விறகு வெட்டிப் பிழைக்கும் ஏழைப்பெண் செண்பகத்திடம் தெரிவானேன்? காலில் விழுந்து வணங்கும் பெண்களைக் கைதொட்டுத் தூக்கும்போது வராத உணர்வு இன்று இவளைத் தனியாகப் பார்த்தவுடன் ஏற்படுவானேன்?

தியானத்தை மறந்து பாறை மறைவிலிருந்து வெளியே எட்டிப்பார்த்தார். மங்கிய விளக்கொளியில் அவள் மல்லாந்து படுத்திருந்தது நன்றாகத் தெரிந்தது. அதற்கும் அப்பால் குகைக்கு வெளியே சுள்ளிகளில் அவர் மூட்டிய தீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அவரது மனதிலோ அவள் மூட்டியதீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

இல்லறம் துறந்து துறவறம் ஏக இருந்தவரைத், தாயும், உற்றார் உறவினரும் சேர்ந்து வற்புறுத்தி மணமேடை ஏற்றிவைத்தார்கள். அன்று—முதல் இரவில் மணப் பெண் காந்தா—முத்துவின் மனைவி-பாலும் பழமும் ஏந்தி பள்ளியறையில் அவரைச் சந்தித்தபோது எவ்வித சலனமும் இல்லாத மனதோடு இருந்தார். பூவும் புத்தாடையும் தந்த கிரக்கத்தில் புதுவாழ்வைத் துவங்க வந்த அவளுக்கு

தாம்பூலத்திற்குச் சிறந்தது

எதிர்பாராத ஏமாற்றமாக இருந்தது என்றாலும் அவள் அதை வெளிக்காட்டாமல் அவரை நெருங்கி 'அத்தான்' என்று ஆசைவார்த்தை கூறினள். ஆசையோடு அவரை அணைத்தாள்; கரத்தோடு கரத்தை இணைத்தாள். அப்போதும் முத்து தனது சன்னியாசித்தனத்திலிருந்து விடபடவில்லை. மனதில் ஆசையோ அதைத் தூண்டும் உணர்ச்சியோ இல்லாமல் கல்லாக இருந்தார். தன் எண்ணமும் எழுச்சியும் ஈடேறாதுகண்ட காந்தா அழுது புலம்பினள். அவளது கண்ணீரும் கம்பலையும் அவரை உருக்கின. அதை மாற்றுவதற்காக அவள் விருப்பம் போல் நடந்து கொண்டார்.

தொட்டுத் தாலிகட்டித் தொடர்ந்த உறவு, உறவுகொண்ட மனைவியிடம் ஏற்படாத உணர்ச்சியும் உத்வேகமும் எட்டி இருந்து எவ்வித உறவும் இல்லாத விறகுவெட்டிப் பெண்ணை நேரில் பார்க்கும் இப்போது படமெடுத்து பாம்பாய்ச் சீறிக் கொண்டிருந்தது.

கால்மேல் கால்போட்டுக் கையில் உருத்திராட்சை மாலையும் தண்டும் ஏந்திக் கண் மூடிப் பார்த்தார். கண்களை மூட விடாமல் ஏதோ ஒன்று தடுப்பதுபோல் இருந்தது—அதையும் மீறிக் கண்களை இறுக மூடினர். பாறையோரத்தில் பாதி ஆடையுடன் மல்லாந்து படுத்துறங்கும் செண்பகத்தின் உருவம் கண்களிரண்டிலும் நிறைந்து நின்றது. ஏக்கப் பெருமூச்சோடு கண்களை அகல விரித்தார்.

மலை உச்சியிலிருந்து கூகையும் மரப்பொந்துகளிலிருந்து ஆந்தையும் ஒன்றுமாற்றி ஒன்று பயங்கரமாக அலறின. இது எந்நாளும் அந்தக் காட்டிற்குள் இரவு நேரத்தில் கேட்கும் குரல்கள்தான் என்றாலும் இன்று என்னவோ அவருக்கு அந்தக் குரல்கள் அச்சத்தையே மூட்டின.

அச்சம் அலைபுரள வில்லை; ஆசை அவரை அலைக் கழித்தது.

இந்தப் பெண்ணுக்கு இங்கு ஏன் இந்நேரத்தில் இடம் கொடுத்தோம். அவள் எப்படிக் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறாள். இடக்கு நிறைந்த துடுக்குக்காரி!

என் நிலையை அவள் புரிந்திருப்பாளோ? பழத்தையும், கிழங்கையும், சாப்பிடாமல் அவளிடம் கொடுத்தும் எச்சில் என்று தெரிந்தும் ஆசையோடு வாங்கிக் கொண்டாளே! அவளுக்குப்பட்டது எவ்

வளவு பெரிய வெட்டுக்காயம்? அந்த வேதனையையும் மறந்துவிட்டு குழந்தையைப்போல் என்னிடம் பேசுகிறாளே! அவளது மனநிலையை எப்படி அறிவது? நிம்மதியாகத் தூங்குகிறாளே! ஒருவேளை அவளும் என்னைப்போல் புயல் வீசும் உள்ளத்தோடுதான் படுத்துக் கொண்டிருப்பாளோ?

எப்படிப் படுத்திருந்தால் என்ன? இந்த அகவேளையில் இங்கு அடைக்கலம் புகுந்திருக்கும் அவள் என்னதான் செய்து விடுவாள்? யார் இருக்கிறார்கள் இங்கு பார்ப்பதற்கு?

ஆண்டியையும் அரசனையும் இந்த ஆசை விடுவதில்லையோ? சீ! என்ன ஆசை இது? கொத்திப் பிடுங்கித் தின்கிறதே, என்னை!

ஆசை அளவுக்குமீறி ஏதாவது செய்து விட்டால், பிறகு இந்த வாழ்வு நிலைக்குமா? பயபக்தியோடும் பெருமதிப்போடும் போற்றிப் புகழும் மக்களுக்கு உண்மை தெரிந்து விட்டால் காரி உமிழ்ந்துவிட மாட்டார்களா? அதன் பின்னர் எங்கு போவது? எந்த வாழ்க்கை வாழ்வது? ஆண்டாண்டு காலமாகக் கட்டுப்பாட்டோடு ஆசாபாசங்களை அடக்கி ஒடுக்கி வாழ்ந்த வாழ்வை அற்ப ஆசைக்காக அழித்து விடவா?

அவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. மனமோ கட்டுக்கடங்காது இருவேறு கோணத்தில் நின்று பேசியது.

'மனித ஆசை, என்பது அற்பமானதல்ல. அது இரத்தத்தோடு சதையோடு கலந்து பிறந்தது' அதை அணைப்போட்டுத் தடுப்பதோ அடியோடு அழித்து விடுவது என்பதோ பேதமையாகும். அப்படி அடக்குவதே செயற்கை வாழ்வாகும். ஆசையைத் தீர்த்து உடல் அவதியைப் போக்குவதே இயற்கை வாழ்வு' என்றது ஒரு மனம்.

'ஆசைக்கு மனிதன் அடிமைதான் என்றாலும் அதை அடக்கி ஆக்கவேலையில் ஈடுபடுவதே ஆறறிவு படைத்த இனத்திற்கு அழகு ஆகும். அது செயற்கையானாலும் அதுவே சிறந்தது', என்றது மற்றொருமனம்.

எந்த மனம் சொல்வது உண்மை? எதைப் பின்பற்றுவது? எதை விடுவது?—அவருக்கே தெரியவில்லை. திகைத்தார்; தவித்தார்; திக்குமுக்காடினார்.

கடைசியில் இயற்கை மனமே வென்றது.

தண்டு கமண்டலத்தையும் உருவேற்றும் உருத்திராட்சை மாலையையும் தள்ளிவிட்டு எழுந்தார். உடலெங்கும் மின்சாரம் பாய்ந்து நரம்புகளெல்லாம் புடைத்தெழுந்தன. தீராத தாகத்தால் துடிக்கும் மனதோடு இயந்திரம்போல் எழுந்து நடந்தார்.

அவரது பாதம்படும் ஒவ்வொரு நேரமும் குகையே குலுங்குவதுபோல் இருந்தது. தினவெடுத்த கைகள் இரண்டையும் முறுக்கிப் பின்னால் கட்டிக்கொண்டு நடந்தார். அவளுக்கு அருகில் சென்றார்.

காலில்பட்ட காயத்தில் சேலைபட்டு விடக்கூடாது என்பதற்காக அவளது ஒரு கை சேலையை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தது. அந்தக் காலில் பெரும்பகுதி வெளியே தெரிந்தது. மற்றொரு கை தலைக்கு அணையாக இருந்தது. அவள் மல்லாந்து படுத்திருந்தாள். மார்ப்புச் சேலை விலகியே கிடந்தது. ஆழ்ந்த தூக்கம் அவளை அணைத்திடக் கிடந்தாள்.

அவளது முகத்தை நன்றாக உற்றுப் பார்த்தார். வெட்டுக் காயத்தினால் ஏற்பட்ட வேதனையின் சாயலே அதில் தென்படவில்லை. வட்டமிடும் வண்டினை 'வா வா' வென்றழைக்கும் செந்தாமரை மலரைப்போல் விரிந்து இருந்தது.

ஏதோ—இனம்புரியாத ஒன்று இதயத்தைக் கசக்கிப்பிழிய உடலெங்கும் வியர்த்துக்கொட்ட அவர் மெதுவாக அவள் பக்கத்தில் உட்கார்ந்தார்.

தூக்கம் கலைந்த பறவை இனங்கள் 'படபட' வென இறகடித்துப் பறந்து இன்பகீதம் பாடின. காட்டுக் கோழிகளின் கூவல் காடெங்கும் எதிரொலித்தது.

காடும் மலையும் விழிப்படைந்து விட்டனவோ? பொழுது எப்போது விடிந்தது?

6

தூகைலடைந்த உள்ளத்தோடு முத்து குகைக்கு வெளியே பார்வையைத் திருப்பினார். கப்பிக் கிடந்த இருள் நீங்கிக் கதிரவனின் வரவைக்காட்ட மரங்களுக்கிடையில் ஒளிபரவி வந்தது. வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தார். காலைக்கடன் முடிக்க ஆற்றை நோக்கி நடந்தார்.

அழுகையும் அசுதங்களையும் அடித்துச் சென்று புனிதப்படுத்தும் ஆற்று நீர், தான் செய்ய விருந்த ஒரு பெருந்தவறையும் அடித்துச் செல்லட்டும் என்று மூன்றுமுறை மூழ்கி மூழ்கி எழுந்தார். புத்தம் புதிய மனத்தோடு நடந்தார்.

மீண்டும் அவர் குகைக்குத் திரும்பியபோது செண்பகம் தூங்கி எழுந்து அவரது வரவுக்காக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சாமி! நீங்க அப்பவே எழுந்திட்டீங்களோ? நான் நல்லா தூங்கி இப்போதான் எழுந்தேன். நேரம் ஆச்சு! சாமி! நான் வீட்டுக்குப்போறேன். ஓங்களாலே எம்புண்ணு நல்லா கொணமாயிடிச்சி! இப்போ வலியே தெரியல்லே! நீங்க நல்லா இருக்கணும். நான் போறேஞ்சாமி!"—சொல்லிக் கொண்டே அவள் இருகரம் கூப்பி வணங்கினாள்.

அவளது முகத்தைப் பார்க்கவே அச்சமாக இருந்தது. குகைப்பக்கம் திரும்பிக்கொண்டே இரவில் எதுவுமே நடக்காததுபோல் "நான் கொடுத்த மருந்தை எடுத்துக்கொண்டாயா?" என்று கேட்டார்.

"மடியிலே இருக்கு சாமி! இவ்வளவு நல்ல மருந்தை நான் பார்த்ததே கிடையாது"—மருந்து இருந்த இடத்தை இடக்கையால் தடவி விட்டுக் கொண்டாள்.

"மறக்காது மருந்தைப்போடு. விரைவில் பூரணமாகப் புண் குணமாகிவிடும்...நீ...போய் வா..."

(வளரும்)

நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகள்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம்
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்! இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
[illegible]